
# கவிஞர் களஞ்சியம்



தமிழ்ப்பண்ணை

# கவிஞர் களஞ்சியம்

★

நாமக்கல் கவிஞரின் நறுமணமிகுந்த
இலக்கியப் பூஞ்சோலையில் கொய்த மலர்கள்

முல்லை - முத்தையா தொகுத்தது

★

தமிழ்ப்பண்ணை

தியாகராயநகர் — சென்னை-17

முதற்பதிப்பு: அக்டோபர் 1948.

விலை ரூ. 0—12—0

அச்சிட்டது :

தி கிரேட் திராவிடன் பிரஸ், 52, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

ஆங்கிலத்தில் அறிஞர்களின் எண்ணக் குவியல்களை சிறு சிறு வடிவில் ஏராளமாகக் காணலாம். அதைப் போன்று நம்முடைய தமிழிலும் நிறைய வரவேண்டும் என்பது என் ஆசை!

அந்த ஆசையின் முதல் முயற்சியாக தலைவர் ராஜாஜி அவர்களின் 'பொன் மொழிகள்' புத்தக உருவில் வந்தது. இரண்டாவதாக இந்தக் 'கவிஞர் களஞ்சியம்' வருகிறது. இதையடுத்து இன்னும் பல தயாராகின்றன.

தமிழ் நாட்டின் பெருமதிப்பைப்பெற்ற நம்முடைய நாமக்கல் கவிஞர் அவர்களின் நூல்கள்—கடிதங்கள் முதலிய நறுமணம் மிகுந்த அற்புதச் சோலையிலே கொய்த மலர்கள்தாம் இவை! இவற்றில் கணக்கற்ற எண்ணக் குவியல்களைக் காணலாம். அவை அத்தனையும் நம்முடைய வாழ்வில்—நல்வாழ்வுக்கு வேண்டிய அடிப்படை உண்மைகளை அழகாகக் கூறுகின்றன. மேலும் இதில் ஹாஸ்ய மொழிகளும் ஆங்காங்கே உள்ளன.

தமிழில் ஏற்படும் நன்முயற்சிகளுக்கு ஊக்கம் அளித்து, உற்சாகம் காட்டி பல அருமையான நூல்களை அற்புதமாக வெளியிட்டுப் பெருமை கொண்ட நண்பர் சின்ன அண்ணாமலை அவர்களின் நல் எண்ணங்களை எல்லோரும் மனமாரப் போற்றவேண்டும்.

—முல்லை - முத்தையா

## நாமக்கல் கவிஞரின் நூல்கள்

மலைக்கள்ளன்
தமிழன் இதயம்
சங்கொலி
பிரார்த்தனை
பறித்த பூக்கள்
அரவணை சுந்தரம்
அவளும் அவனும்
கப்பலோட்டிய தமிழன்
பார்ப்பனச் சூழ்ச்சியா?
இலக்கிய இன்பம்
ஆரியராவது திராவிடராவது!
ஆடு சிரித்தது (குழந்தைகளுக்கு)
என் கதை

# கவிஞர் களஞ்சியம்



1. மதவெறியால் இந்த உலகத்தில் நடந்திருக்கிற அநியாயங்களுக்கு அளவே இல்லை. அவற்றை நினைக்கின்றபோது மதங்களும் கோயில்களும் அழிந்து போனாலும் பாதகமில்லைதான் என்ற ஆத்திரம் நமக்கு உண்டாவதில் ஆச்சரியமில்லை.

● ● ●

2. உலகத்திலுள்ள மனிதர்கள் எல்லோரும் உணவு, உடை, குடியிருக்கை இவைகளிலாவது சம சௌகரியங்களோடு வாழ இடமிருக்கும்படியாக ஒரு சமுதாயம் அமையவேண்டும் என்பதுதான் சமதர்மம் என்பதற்கு அர்த்தம்.

● ● ●

3. யாருக்குப் புரிந்தாலும் சரி, புரியாவிட்டாலும் சரி, எவர் விரும்பினாலும் சரி இந்த 'சமதர்மம்'—'அபேதவாதம்'—'பொதுவுடைமை' என்ற பேச்சுகளில் அடங்கியிருக்கிற தத்துவம் இப்போது உலகத்தில் எங்கு பார்த்தாலும் ஒரு புது உணர்ச்சியோடு உதித்து வருகின்றது.

● ● ●

4. பட்டினியால் வாடி வருந்தும் மிகப் பெரும்பான்மையான மனித வர்க்கத்தின் வயிறு எரிகின்றது. மனம் கொதிக்கின்றது. கை கால்கள் எதைச் செய்தா

னாலும் சரி கொஞ்சம் சோறு கிடைத்தால் போதுமென்று துடிக்கின்றன. "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியாரின் பாட்டு எந்த உணர்ச்சியிலிருந்து எழுந்ததோ, அதே உணர்ச்சி தான் இப்போது ஏழை மக்களைத் தூண்டி சமதர்மம் என்றும், பொதுவுடைமை என்றும் துடிக்கச் செய்கின்றது. அதை அடக்க முயலுவது அறிவுடைமை ஆகாது.

● ● ●

5. புதுப்புது மாறுதல்களுக்குத் தக்கபடி ஒரு புது சமுதாயத்தையும் பொருளாதார அமைப்பையும் உண்டாக்க வேண்டியது மிகவும் அவசியம். ஜாதி, மத வித்தியாசங்களாலுண்டான தீமைகளை ஒழித்த ஒரு சமுதாயம் அமையவேண்டும் என்பதைவிட பொருளாதார வித்தியாசங்களாலிருக்கிற தீமைகளைத் தீர்க்கக் கூடிய ஒரு புது சமுதாயம் அமையவேண்டும் என்பதே அவசரமான அவசியம்.

● ● ●

6. சமதர்ம எண்ணங்கள் பரவுவதை நாம் தடுக்கவே முடியாது.

● ● ●

7. எங்கே பார்த்தாலும் பெரும்பான்மை ஜனங்கள் பசிக்குக் கஞ்சிகூட கிடைக்காமல் பரதவிக்கின்றார்கள். பட்டினியின் கொடுமையால் அவர்கள் நெஞ்சம் குமுறுகின்றது. வறுமை அவர்களை வாட்டிவிட்டது. அவர்கள் பொறுமையையும் ஓட்டிவிட்டது.

● ● ●





8. பாடுபடும் பலகோடி மக்கள் பட்டினி கிடந்து பதைக்கும்போது, உழைப்பில்லா சிலர் மட்டும் உலகத்தின் செல்வத்தை எல்லாம் தாங்களே வைத்துக்கொண்டு அவசியமில்லாத ஆடம்பரங்களில் அவற்றை அழித்துக் களிப்பது ஏனோ என்ற எண்ணம் எல்லாரையும் இழுக்கின்றது. இதுதான் ரகசியம். சமதர்மப் பேச்சுகளை எதிர்க்கின்றவர்களும்கூட இதை இல்லையென முடியாது.

● ● ●

9. ஒரு நூற்றுண்டின் உலக சரித்திரத்தைக் கவனமாகப் படித்தால், இந்தக் காலத்தில் தோன்றிய பணக்காரர்கள் வெறும் சோம்பேறிகளாக, சுகபோகங்களுக்கே உயிர் சுமந்தவர்களாகி, பொதுஜன நன்மையையும் ஏழைகளுக்கு இரங்குவதையும் எண்ணவே இல்லை என்பதை அறியலாம். அதனால் கொஞ்சங் கொஞ்சமாக இவர்களுக்கு ஏழைகள் மரியாதை காட்டுவது குறைந்துகொண்டே வந்திருக்கிறது.

● ● ●

10. பணக்காரர்களுடைய வீட்டிலிருக்கும் வண்டி, மாடு, பூனை, நாய், சுவர், ஜன்னல், கதவு, கார் முதலான வற்றிற்கு கிடைக்கக்கூடிய பராமரிப்புக்கூட அதே வீட்டில் காலையிலிருந்து நடுஜாமம் வரையிலும் ஓயாது வேலை செய்யும் ஒரு மனித ஜன்மத்துக்கு இருப்பதில்லை.

● ● ●

11. சிறுபான்மையோர் மட்டும் சுகப்பட்டு பெரும் பான்மையோர் சோறும் துணியும்கூட இல்லாமலிருப்பது மிகவும் நியாயமில்லாத நிலைமை.

• • •

12. வேலையே செய்யாத சிலர் விருந்து சாப்பிட்டுக் கொண்டேயிருக்க, உழுது பயிரிட்டு மற்ற உழைப்புகளை எல்லாம் செய்கிற பலர், உண்ணக் கஞ்சியும் கிடைக்காமல் ஓலமிடுவதை ஒத்துக்கொள்ள முடியாது.

• • •

13. ஆசையை அடக்குவது லேசான காரியமா!

• • •

14. மேடைப் பிரசங்கங்களில் நான் பிறருக்கு உபதேசித்த காந்திய தத்துவங்கள் ஒன்றுவது எனக்கு இளமையில் உதவாமற்போனதைப் பார்த்த பின்புதான், இன்னொருவருக்கு வேதாந்தம் உபதேசிப்பது எவ்வளவு எளிது என்பதும், நாமே அப்படி நடந்துகொள்வது எவ்வளவு கஷ்டம் என்பதும், எனக்குப் புரிந்தது.

• • •

15. பாரதியார் பாடல்களை அச்சிட்டவர்கள், குறிப்பிட்ட சொற்றொடர்களைச் சில அடிகளை அடியோடு விட்டுவிட்டும், புள்ளிகளை வைத்தும், வேறு சில இடங் களில் பதங்களை முற்றிலும் மாற்றியும், இன்னும் சில இடங்களில் இடைச்செறுகல் செய்தும் அச்சிட்டு விற்க லானார்கள். நாளடைவில் விடுபட்ட பாட்டுகளுக்காக புள்ளிகள் வைத்து அச்சடிப்பதும் போய்விட்டது. மாற்றப்பட்ட பாட்டுகளும் மறைந்துவிட்டன. இப்





போது கிடைப்பது இடைச்செறுகலோடு கூடிய பாட்டு கள்தாம். ஸ்ரீ நாகராஜய்யங்கார் எழுதிக்கொண்டு வந்து எங்களுக்குச் சொன்ன பாட்டிற்கும், இப்போது புத்தகத்தில் படிக்கிற 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற பாட்டிற்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன.

• • •

16. நம்முடைய கண்ணுக்கு முன்னால் வாழ்ந்து, நம்முடைய காதுக்குக் கேட்கும்படி பாடிய பாரதியாரின் பாட்டுகளே, சுமார் முப்பது ஆண்டுகள் முடிவதற்குள், எத்தனையோ பாடபேதமும் இடைச் செறுகல்களுமாகப் போனது மட்டுமல்லாமல் அப்படிப் பாட பேதமான பாட்டுகளும் கூட மறைந்தே போய்விட்டதைப் பார்க்கும் போது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட கம்பராமாயணத்தில் பாடபேதமும் இடைச்செறுகலும் கலந்திருக்கலாம் என்பது மிகவும் சாத்தியமான விஷ யம்தான். அதன் உண்மைகளைக் கண்டறிவதும் அசாத்தியம் தான்.

• • •

17. வேதாந்த சித்தாந்த விஷயங்களை இக்காலத் தில் வேலையற்றவர்கள் தான் விரும்பக்கூடும். அப்படி வெறும் வேதாந்த சித்தாந்த விஷயங்களில் பொழுதைச் செலவிடுகின்றவர்களைச் சமுதாயம் விரும்புவதில்லை. இதுயாருடைய குற்றமும் அல்ல. காலப்போக்கின் கட்டாயம்.

• • •

18. மனித சமூகத்தை இப்போது வாட்டி வதைக்கின்ற ஜாதிக்கொடுமை, நிறக்கொடுமை, சோற்றுப் பஞ்சம் முதலான தீமைகளை மாற்றுவதற்கு வழி சொல்லக்கூடிய பிரசாரப் பாட்டுகள்தான் இப்போது தேவை. அந்தப் பாட்டுகளும் பாமர மக்களுக்குப் புரியும்படியான எளிய நடையில் இருக்கவேண்டும்.

● ● ●

19. பாமர மனப்பான்மையின் வேகம் பல படித்தவர்களையும் பற்றிக்கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்துக்காக பழைய இலக்கியங்களையும் பழிக்கின்றார்கள். மனித சமூகத்துக்கு இன்றியமையாத அறங்களையே சொல்லக்கூடிய மிக உயர்ந்த இலக்கியங்களையும் கூட இகழ்ந்து பேசத்துணிவது இப்போது சமுதாயத்தில் இருந்துவரும் சச்சரவுகளால் தான்.

● ● ●

20. இறந்த காலங்களின் அனுபவத்திலிருந்துதான் நிகழ்காலத்தின் அறிவு பிறந்தது. நிகழ்காலத்தைப் பார்த்துதான் எதிர்காலத்தை எண்ணவேண்டியிருக்கிறது.

● ● ●

21. பழைமையின் தொடர்ச்சியே புதுமை என்ற நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கையோடு பழைய இலக்கியங்களைப் பார்த்தால் அவற்றைப் பழிக்கவேண்டிய பழியைச் செய்ய மனம் இடந்தராது.

● ● ●





22. மனித சமூகத்திற்கு அறிவு வந்த நாள்தொட்டு 'விதி' என்பது 'கடவுள் உண்டா இல்லையா' என்பதைப்போலவே விவாதத்துக்கான விஷயமாகத்தான் இருந்து வந்திருக்கிறது.

● ● ●

23. விதி என்பது நாம் செய்யும் காரியத்தின் பலன்தான் என்பதை ஏறத்தாழ எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அந்தக் காரியம் நாம் அறிய, நமது கண்ணுக்கு முன்னால் நடந்து அதன் பலனை நேரடியாக அனுபவிக்கிறபோது அது சரியான 'காரண—காரியம்' ஆகிவிடுகிறது. அப்போது அதை மறுக்க மனம் வருவதில்லை.

● ● ●

24. கோபம் வந்துவிட்டால் நியாயங்கள் குழம்பிப் போவது வழக்கம்.

● ● ●

25. எல்லா மக்களும் பாட்டில் விருப்பம் காட்டுகின்றார்கள். ஒவ்வொரு மனிதனும் 'சங்கீதம், இசை' என்ற சொற்களையே அறியாதவனாக இருந்தாலும் கூட, சிற்சில சமயங்களில் தனக்குள்ளேயாவது பாடி மகிழ்கின்றான். அவனவன் அவனவனுடைய சொந்த மொழியில் தான் பாட்டை விரும்புவான்.

● ● ●

26. கறுப்பாக இருந்த ஒரு மலையைப் பல காலமாகக் 'கருமலை' என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். பிற்காலத்தில் அந்தப் பெயர் நன்றாக இல்லை என்று

நினைத்து, கொஞ்சகாலமாக அது 'கிருஷ்ணகிரி' என்று சொல்லப்பட்டு வருகிறது. இப்படியாகச் சென்ற சில நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டில் பிற மொழிப் பெயர்களை வைத்துக்கொள்வது ஒரு நாகரீகம்போல் வளர்ந்து விட்டது.

● ● ●

27. பாதம் கீர் என்பது 'பாதம் க்ஷீர்'. 'க்ஷீரம்' என்றால் வடமொழியில் பால் என்று அர்த்தம். 'பாதம் க்ஷீர்' என்றால் பாதாமிப்பால் என்றுதான் அர்த்தம். அதைத் தமிழில் சொன்னால் 'வாதுமைப்பால்' என்றாகும். அப்படிச் சொல்லுவது அழகுமில்லை, வியாபாரத் தோதுமில்லை என்று, வார்த்தையைகூடத் தப்புந்தவறுமாக உச்சரித்து பாதம் 'கீர்' என்று சொல்லுகிறார்கள். அதைக்கேட்டு, அதை முன்பின் அறியாதவர்கள் என்னமோ ஏதோ ஒரு புதுமாதிரியான சரக்கு இருப்பதாக எண்ணி அதில் ஆசைகொள்ளுகிறார்கள்.

● ● ●

28. ஊர்களின் பெயரும், மனிதரின் பெயரும், உண்டிகளின் பெயரும் மட்டுமல்ல, நல்ல படிப்பாளிகள் கூட தமிழிலேயே இயற்றிய தங்கள் நூலுக்கு வடமொழிப் பெயர்களை வைத்திருக்கிறார்கள்.

● ● ●

29. இங்கிலாந்தின் ஜனநாயக சபையான 'பார்லிமென்ட்' என்ற பெயர் தமிழ்ச் சொல் என்று சொல்லலாம் என்று ஒருவர் சொன்னார். எப்படி என்றால் 'பார்லிமெண்டு' என்னும் பதம் 'பாரளி மன்று' என்பதின் மருவாம். பார்—உலகத்தை அல்லது நாட்டை அளி—காக்கின்ற, மன்று—சபை, பார்லிமென்ட் ரொம்பவும் பொருத்தமாகத்தான் இருக்கிறது. ஒன்றும் தெரியாதவர்கள் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் தமிழிலிருந்தா 'பார்லிமென்ட்' என்ற பதம் வந்திருக்க முடியும்? இப்படி வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு வாதாடுவதெல்லாம் அறிவுக்கும் அழகல்ல, உண்மைக்கும் ஒத்ததல்ல.

● ● ●

30. தாய்மொழி உறவு தள்ள முடியாதது. எந்த அறிவும் தாய்மொழி மூலமாகத்தான் வளரமுடியும்.

● ● ●

31. எந்த மொழியிலானாலும் ஒவ்வொரு நாட்டிலும் அங்குள்ள எழுத்தாளர்கள்தான் மக்களின் அறிவை வளர்க்கும் சக்திகள்.

● ● ●

32. வடமொழிக்கும் தென்மொழிக்கும் வேற்றுமை தெரிகிறது. வடநாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும் வித்தியாசம் தெரிகிறது. வடதேசத்துப் பண்புகளுக்கும் தென்தேசத்துப் பண்புகளுக்கும் உள்ள பேதமும் தெரிகிறது. இப்படியே மற்ற வேறுபாடுகளும் விளங்குகின்றன. ஆனால், இந்த ஆரியனும் திராவிடனும் யார் என்பது மட்டும் தெரியவில்லை.

● ● ●

33. இங்குள்ள பார்ப்பனர்கள் எங்கேயோ இருந்து வந்து தமிழ் நாட்டில் திடீரென்று புகுந்துகொண்டவர்கள் அல்ல. அன்றியும் அவர்கள் கோயில்களுக்கு குருக்கள் ஆனதும், தமிழர் வீட்டுச் சடங்குகளுக்குச் சாஸ்திரிகளானதும், மன்னவர்களுக்கு மந்திராலோசனை சொன்னதும் அவர்களுடைய சொந்த முயற்சியால் நேர்ந்துவிட்ட சூதுகள் அல்ல. பாண்டியனும் சேரனும் சோழனும், பார்ப்பனரல்லாத மக்களின் உழைப்பைக் கொண்டு கட்டிவைத்த கலாநிலையங்களான கோயில்களில் இந்தப் பார்ப்பனர்களின் ஆதிக்கம் பெற்றுவிட்டது அவர்களுடைய தந்திரத்தாலோ மந்திரத்தாலோ அல்ல. அக்காலத்திலிருந்த தகுதியினால் தமிழ் மன்னர்களும் தமிழ் மக்களும் தாங்களாகவே தந்த பெருமைதான்.

● ● ●

34. இங்கிலீஷைப் படித்துவிட்டவர்களெல்லாம் இங்கிலீஷ்காரர்களாகிவிட மாட்டார்கள். அதைப் போலவே ஆரியமொழியைப் படித்தவர்கள் ஆரியர்களாகிவிடமாட்டார்கள். சொல்லத் தெரியாதவர்கள் 'தஞ்சாவூரை' 'டாஞ்சூர்' என்று சொல்லிவிட்டதனாலேயே தஞ்சாவூர்க்காரர்கள் தங்களை 'டாஞ்சூரியர்' என்று சொல்லிக்கொள்வது தகுதியல்ல. அதைப்போலவே யாரோ அன்னியர்கள் தமிழர் நாட்டை 'திராவிடம்' என்று சொன்னதற்காக தமிழர்கள் தங்களைத் திராவிடர் என்று சொல்லிக்கொள்வது சரியல்ல.

● ● ●





35. தமிழ் நாடு என்று சொல்லும்போது வெறும் இறந்தகால உண்மைகளை மட்டும் எண்ணுமல் நிகழ்கால நியாயங்களையும் சேர்த்து எண்ணவேண்டும்.

● ● ●

36. கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் வாலிபப் பருவம் நினைத்தபோது வரக்கூடியதல்ல.

● ● ●

37. இன்பம் நிறைந்த இளமைப் பருவத்தின் சிறப்பை என்னென்று சொல்லமுடியும்? வித்தையின் வித்துக்கள் வேரூன்றும் பருவம். வாழ்க்கையின் லட்சியம் வளருகின்ற பருவம். அறிவின் மொட்டுகள் அரும்பும் காலம். மனம் என்னும் புஷ்பம் மலருகின்ற தருணம். அன்பும் ஆர்வமும் அலைபுரளும் சமயம். புதுப்புது துடிப்புகள் போராடும் நேரம். தாராள எண்ணங்கள் தலைதூக்கும் தருணம். கஞ்சத்தனங்கள் கலக்காத காலம். ஒவ்வொரு குணமும் உருக்கொள்ளும் பருவம்.

● ● ●

38. கள்ளமற்ற பேச்சும் கலகலத்த சிரிப்பும் துள்ளி விளையாடும் சுறுசுறுப்பும் நிறைந்தது இளமைப் பருவம்.

● ● ●

39. பஞ்சமும் பசியும், கொலையும் கொள்ளையும், பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் குறைந்த காலமே நாகரிக காலமாகும். அப்படிப்பட்ட காலத்தை உண்டாக்க உழைப்பதே நாகரிக அரசாங்கத்தின் வேலை.

● ● ●

40. ஆட்சிமுறை எந்தப் பெயரால் நடந்தாலும் சரி, எந்த நாட்டில் ஆளுகின்றவர்களும் ஆளப்படுகின்றவர்களும் நியாய - அநியாயங்களை நினைத்து, தர்ம - அதர்மங்களைச் சரிபார்த்து, பாவ - புண்ணியங்களுக்குப் பயந்து நடக்கிறார்களோ அந்த நாட்டில்தான் நல்வாழ்வு உண்டு.

● ● ●

41. அரசாங்க சட்ட திட்டங்களுக்கு மட்டும் பயந்து நடக்கின்ற நாட்டில் சந்தோஷம் இருக்காது. சட்டபூர்வமான வாது வழக்குகள் தான் மலிந்திருக்கும்.

● ● ●

42. ஒரு மனிதனையோ அல்லது ஒரு கூட்டத்தையோ அவர்களுடைய பெருமையை அளப்பதற்கு இந்த உலகத்தில் " தியாகம் " என்ற ஒரே ஒரு தராசுதான் உண்டு.

● ● ●

43. உண்மையான வீர வாழ்க்கை வாழ்ந்து உலகத்துக்கு எல்லாம் நாகரிகம் இன்னதெனக் கற்பித்த நம்முடைய பிராமணரல்லாத முன்னோர்கள் சொந்த அறிவில்லாமல் பிராமணர்களுடைய சூழ்ச்சியினால் ஏமாந்து போனவர்கள் என்பதை எந்தத் தமிழனும் ஏற்றுக்கொள்ள முடியாது.

● ● ●

44. ஜாதி வேற்றுமையினாலும் மத வித்தியாசங்களினாலும் இந்த நாட்டில் இப்போது தீமையாக இருக்கின்ற ஏற்பாடுகளுக்கெல்லாம் பழைய காலத்து பிராமணர் எவ்வளவு பொறுப்பாளியோ அவ்வளவு பொறுப்பாளி பிராமணரல்லாதாரும்.

● ● ●





45. நல்லவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையில் மறைக்கவேண்டியது ஒன்றும் இருக்காது.

● ● ●

46. 'இன்பம்' என்றால் எல்லாருக்கும் தெரியும். அதற்கு அர்த்தம் சொல்லமுடியாது. அது ஒரு உணர்ச்சி.

● ● ●

47. எல்லாருக்கும் கோடு கிழிக்கத் தெரியும். புள்ளி வைக்கத் தெரியும். ஆனால் நன்றாகக் கோலம் போடத் தெரிந்த ஒரு பெண்மணி, ஒரு தனி நினைவில் பல புள்ளிகளை வைத்து, சில கோடுகளைச் சேர்த்து வெகு விசித்திரமான வடிவம் ஒன்றை வாசலில் வரைவதை நாம் வியந்து மகிழ்கின்றோம்.

● ● ●

48. அன்புக்கு உள்ள சக்திகள் அளவிறந்தன. அதுவும் 'சாமர்த்தியம்' 'தந்திரம்' என்ற அழுக்குகள் கலக்காமல் இருக்கும்போதுதான் அந்த சக்தி உச்ச நிலையில் நிற்கிறது.

● ● ●

49. வந்துவிடுவதைக்காட்டிலும் "வரவேணும்" என்ற அவஸ்தையில்தானே இன்பம் அதிகம்!

● ● ●



2

50. நல்லதோ கெட்டதோ 'நம்பிக்கை' நம்பிக்கை தான். அதை 'ஏன்?' என்று விவாதிப்பது விவேக மல்ல. கழித்துக் கட்டுவதற்காக 'நம்பிக்கை' என்ற சாக்குச் சொன்னாலும்கூட அதைக் கண்டறிவது கஷ்டம்.

● ● ●

51. 'அதிர்ஷ்டம்', 'துரதிருஷ்டம்' என்று நாம் எதை எப்படி நினைத்துகொண்டாலும், நம்முடைய எண்ணங்களையும் அளத்தல், நிறுத்தல், கூட்டல், கழித் தல்களையும் கடந்து நிற்கின்ற தெய்வசித்தந்தான் நடக்கும். அந்த சித்தத்திலிருந்துதான் நம் சக்திகள் அனைத்தும், இந்த நம்பிக்கை ஒன்றுதான் நம்மைக் காக்கும். ஆனால் அந்த நம்பிக்கை வெறும் பூசை களாலோ அல்லது கோயில் குளங்களுக்குச் செய்துவிடும் தானங்களாலோ மட்டும் வந்துவிடக் கூடியதல்ல.

● ● ●

52. பிறர் கஷ்டத்திலிருந்து நாம் நலம்பெறுவது மிகவும் இழுக்கான காரியம்.

● ● ●

53. பொழுது போக்காகப் பிறர் பேசின பேச்சை யெல்லாம் சத்தியமான வாக்குறுதிகளாக நினைத்து ஆசை வைத்து விடுகிற அறியாமை நம்மதேயல்லாமல் பிறருடையதல்ல, நம்முடைய பிழைகளுக்குப் பிறரை நிந்தனை செய்யக்கூடாது.

● ● ●





54. ஒருவர் உதவி செய்யாததற்கு அவர்மீது வருந் துவதைக்காட்டிலும், அவர் செய்ததற்கு மட்டிலும் நன்றி செலுத்திவிட வேண்டியது நமது கண்ணியமும் கடமையுமாகும்.

● ● ●

55. அறிவுள்ளவர்களோடு அளவளாவுவதே ஒரு ஆனந்தம்.

● ● ●

56. சொந்த வீட்டில் சுதந்திரமாகக் கஞ்சி குடித் தாலும் அந்த இன்பம் அலாதிதான்,

● ● ●

57. எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் மன உறுதி யைக் கைவிட்டுவிடக்கூடாது.

● ● ●

58. மொண்டி முடம் செவிடு ஆனாலும் பெற்ற வளுக்குப் பாரம் ஆகாது.

● ● ●

59. ஒரே காரியத்தில் உழைத்துவரும் இருவர் ஒரே விதமான துன்பங்களை அனுபவிக்கிறதை அறிகிறபோது அதுவும் ஓர் உறவாகின்றது.

● ● ●

60. ஆண்களைவிட பெண்களிடத்தில்தான் அன்பும் பச்சாத்தாபமும் உண்மையான உபகார சிந்தையும் அதிகம். அத்துடன் லௌகீக ஞாயங்களையும் குடும்ப நிர்வகிப்பின் கஷ்ட நிஷ்டூரங்களையும் அதிகமாக அறிந்தவர்களும் பெண்கள்தான்.

● ● ●

61. அரசியல் பேச்சுகளை நினைப்பூட்டிக்கொண்டேயிருக்க மகாநாடுகள் அவசியம்தான்.

● ● ●

62. தேவாலயங்களின் திருப்பணிகளுக் கென்றே தூய கலை—வாழ்க்கையில் பழக்கப்பட்டு வந்த தேவதாஸிய குலத்தை, மற்ற சமூகத்தினர் தங்கள் காம வேட்டைக்குக் களஞக்கிப் பாழ்படுத்தி தமிழ்நாட்டிற்கே அவகேடு செய்துவிட்ட அக்கிரமத்துக்கு சரித்திரம் சாட்சியாக நிற்கிறது.

● ● ●

63. அரசியல் வாதியாக இருப்பதைப்போன்ற அலுப்புத்தரக்கூடிய வேலை வேறு எதுவும் இல்லை என்பது உலகப் பிரசித்தம்.

● ● ●

64. எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும், எவ்வளவு உழைப்பாளியாக இருந்தாலும், எவ்வளவு நுணுக்கமாக அரசியல் சட்டதிட்டங்களை ஆய்ந்து அளந்து அமைத்துத் தரக்கூடிய ஆற்றல் உள்ளவராக





இருந்தாலும் வெறும் அரசியல் வாதிகளுக்கு உலகம் போதிய அளவு நன்றி செலுத்துவதில்லை.

● ● ●

65. ஒரு கோயில் கட்டிவைத்துப்போன மன்னனைக் குலதெய்வம்போலக் கும்பிடுவாருண்டு. ஒரு குளம் வெட்டி வைத்த சீமானை அடிக்கடி சிறப்பித்துப் பேசுவாருண்டு. ஆனல் மிகவும் பயன்படக்கூடிய விதத்தில் நீதி செலுத்திய அரசனையோ, அவனுடைய அரசியல் திறமையையோ ஜனங்கள் அடிக்கடி நினைப்பதில்லை.

● ● ●

66. மனிதன் முயலும் எல்லாத் துறைகளிலும் அரசியல் துறையைப்போல் அவ்வளவு ஏமாற்றம் தரக்கூடிய இடம் வேறு எதுவும் இல்லை. இது உலகத்தில் எல்லா அரசியல் வாதிகளுக்கும் பொதுவான விதி.

● ● ●

67. அரசியலில் ஈடுபட்ட சிலபேரை ஜனங்கள் அடிக்கடி நினைத்துப் பாராட்டி வந்திருக்கலாம். ஆனல் அது அவர்களுக்கிருந்த வேறு சிறப்புக்களுக்காகவேயல்லாமல் அரசியல் வாதி என்பதற்காக அல்ல.

● ● ●

68. 'கற்றலில் கேட்டலே நன்றெ'னும் கட்டுரை படிப்புக்கு மட்டுமல்ல பாட்டிற்கும் உண்டு. படித்துக் கற்றிடும் அறிவைக்காட்டிலும, கேட்டுக் கற்றிடும் அறிவே கெட்டியாகும்.

● ● ●

69. தனித்தனி மனிதன் தன்னறம் காத்து, விட்டுக்கு வீடு கடமையைக் கருதி, ஒவ்வொரு குடும்பமும் ஒழுக்கமே கொண்டு, ஊருக்கு ஊராய் உரிமைகள் தந்து அவரவர் கடமையை அவரவர் செய்தால், சமுதாய வாழ்வு சரிவர நடந்து பொதுநலம் என்பது தானே புலப்படும்.

● ● ●

70. மன்னவராயினும், மற்றவராயினும், மந்திரியாயினும் சொந்த வாழ்க்கையில் சுத்தமாய் நடந்தால் அரசியல் ஒழுங்கும் தானே அமையும்.

● ● ●

71. தனக்கு ஒரு நீதி, பிறருக்கு ஒரு தன்மை என்பதைத் தமிழன் இலக்கியம் வெறுக்கும்.

● ● ●

72. புதுமையே போல நம்மிடையே புகுந்த, அன்னிய அரசியல் அறிவுகள் அனைத்தும், சூதும் வாதும் சூழ்ச்சியும் மிகுந்து தன்னலம் ஒன்றே தலைவிரித்து ஆட பிறநலம் சிறிதும் பேணுத் தன்மையால் பொதுநலம் என்பது புதைந்துவிட்டது.

● ● ●

73. மாறுதல் கோருவது மக்களின் இயல்பே.

● ● ●





74. நித்தியமான சத்தியம் நிறைந்து—நியாயம் சேர்ந்த ஒழுக்க வழக்கம் உண்டென்றாலும், 'வழக்கம்—வழக்கம்' என்று இழுக்கம் மிகுந்த எதையும் செய்து, சமுதாயத்தைச் சாக்கடையாக்கிச் சேற்றில் புரள விடுவதை மாற்றுதல் அறிவுடைய மக்களின் கடமை.

● ● ●

75. சத்தியம் பேசும் சாது மக்களை சீறி அடக்கியும் சிறையில் தள்ளியும் உலகமும் தாங்களும் உள்ள வரையிலும் பரம்பரையாகப் பாத்தியம் கூறி சுகித்து வாழும் சூழ்ச்சிகள் எண்ணி அரசியல் தந்திரம் அனைத்தையும் சேர்த்து திட்டம் போடும் திறமை மிகுந்த எத்தனையோ பல ஏகாதிபத்தியம் மண்ணிற் புதைந்து மறைந்துபோவதை படித்தும் கேட்டும் பார்த்தும் வருகிறோம்.

● ● ●

76. அன்னைக்குப் பதில் பின்னையொருவர் கிடைப்பரா? எத்தனையோ நண்பர்கள் கிடைக்கலாம்; எத்தனையோ கலியாணங்களைச் செய்துகொள்ளலாம்; எத்தனையோ பேருடன் உறவாடலாம். ஆனால் அன்னை ஒருத்திதான். அவள் அன்பும் அலாதிதான்! அந்த அரும்பெரும் பொருளையும் எவ்வளவோ பேர் அவமதிக்கிறார்கள்!

● ● ●

77. சாதி, மதம், சம்பிரதாயம், சடங்குகளெல்லாம் அன்பிற்கு முன்னால் நிற்காது.

● ● ●

78. ஒருவர் ஒரு கலையில் சிறப்புள்ளவராக விளங்குவதற்கு அதற்கான ஒரு துடிப்பும் தூண்டுதலும் இயற்கையாகவே அவரிடத்தில் இருந்தால்தான் முடியும்.

• • •

79. வித்தை சிறப்பதற்கு முயற்சியும் பயிற்சியும் அவசியம்தான் என்றாலும், வெறும் முயற்சியும் பயிற்சியும் மட்டும் வித்தையைத் தருவதில்லை என்பது வெளிப்படை. ஒருவர் ஒரு கலையில் ஓரளவேனும் திறமையுள்ளவராவதற்கு அவருடைய சுபாவத்தில் அதற்கான ஏதோ ஒரு கிளர்ச்சி இருக்கவேணும்.

• • •

80. இன்றையக் கல்வி முறையில் முதல் வகுப்பிலிருந்தே நோட்டுப் புத்தகங்களையும், காகிதப் பென்ஸில்களையும் எல்லாப் பாடங்களுக்கும் வாங்கியே தீரவேண்டியிருக்கிற நிர்ப்பந்தத்தை நினைத்தால், நம் நாட்டின் கல்வி இலாகாவென்பது, அயல் நாடுகளில் காகிதத்தையும் பென்ஸில்களையும் உற்பத்தி செய்கிற கம்பெனிகளின் கமிஷன் ஏஜண்டோ என்றுகூட எண்ணவேண்டிய வருத்தம் வருகிறது.

• • •

81. காடும், மலையும், கடலும், நதியுங்கூடத் தன் சரித்திரக் குறிப்புகளை எழுதிவைக்க முடியுமானால், அவைகளிலும் இன்ப உணர்ச்சிகளுக்கு விருந்துகள் இருக்கலாம்.

• • •





82. வாழ்க்கையின் தேவைகளும் இன்ப துன்பங்களும் எல்லா மனிதருக்கும் ஏறத்தாழ ஒரேமாதிரி இருந்தாலும், வாழ்க்கையில் நேரிடும் நிகழ்ச்சிகளும் அவற்றைச் சாத்தியமாக்கும் சமய சந்தர்ப்பங்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறாகவே இருக்கின்றன.

• • •

83. உலகத்தில் எத்தனை கோடி மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை கோடி சரித்திரங்கள் இருக்கின்றன. வாழ்க்கையில் பிறருக்கு வழி காட்டக்கூடிய முயற்சிகள் எல்லா சரித்திரத்திலும் இருக்கமுடியாது. என்றாலும். படிப்பதற்கும் கேட்பதற்கும் ருசிகரமாகிய சம்பவங்கள் பல சரித்திரங்களில் இருக்கவே இருக்கும்.

• • •

84. அக்காலத்து நடிகர்களிற் பலரும் தங்களுடைய கலைக்கு வேண்டிய கல்வியறிவும் மனோதர்மமும் சுதந்திரமாக நிறைந்தவர்கள். வெறும் பாடத்தை ஒப்பிக்கும் பள்ளிப்பிள்ளைகளைப் போன்ற நடிகர்கள் அல்ல. இலக்கியங்களை இஷ்டப்படி மாற்றமாட்டார்கள். நாடக மேடையை மக்களுக்கு அறங்களைப் புகட்டிச் சமுதாயத்தைப் பண்படுத்த ஒரு சாதகமாக எண்ணினவர்கள். முதலாளி விருப்பத்திற்காகக் கதையை மாற்றி, டைரக்டருடைய சந்தோஷத்துக்காக நடிப்புக்களைச் செய்து நாடக லட்சணங்களை அறியாமல், வெறும் ராக தாளங்களை மட்டும் கருதுகின்ற, வார்த்தை விளங்காத பாட்டுக்களைப் பாடி, உணர்ச்சியில்லாத ஓசைகளைக்

கிளப்பி, எழுதிக்கொடுத்த பாடங்களையும் அனுபவிக்காமல் ஒப்புவித்து, ஜீவனில்லாமல் ஓடுகின்ற பல சினிமாக்கள் அல்ல நான் சொல்லும் கலைஞர்களின் நாடகங்கள்.

● ● ●

85. மனிதன் தன்னுடைய வெற்றி தோல்விகளைப் பற்றியும், இன்ப துன்பங்களைப்பற்றியும், இரண்டே இரண்டு விதமாகத்தான் சொல்லிக்கொள்ள முடியும். ஒன்று, நாம் விரும்புகின்ற விதமாய் நம்முடைய காரியங்கள் கைகூடி, நம்முடைய வாழ்க்கை சரளமாக நடக்கின்றபோது, அந்தக் காரியங்களெல்லாம் நம்முடைய புத்திக் கூர்மையினாலும், நம்முடைய முயற்சியினாலும், நம்முடைய உழைப்பினாலும்தான் முடிந்துவிட்டதாக எண்ணி "ஊழையும் உப்பக்கங் காண்பார் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்" என்ற திருக்குறளை மேற்கோளாகக் காட்டி—'தளர்ச்சியில்லாமல் அடுத்தடுத்து உழைக்கிறவர்கள் விதியையும்கூட வென்றுவிடுவார்கள்'—என்று பெருமை பேசிக்கொள்வோம். இன்னொன்று, நம்முடைய முயற்சிகளும் தந்திரங்களும் பலிக்காமல், கோரிய காரியம் கூடாமல், தோல்வியடைந்து விடுகின்றபோது "ஊழிற் பெருவலியாவுள, மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்" என்ற குறளைக் குறித்துக் காட்டி—'விதியைக் காட்டிலும் வலிமையுள்ளது என்ன இருக்கிறது? நாம் என்னதான் தந்திரங்களைச் செய்தாலும் அந்த விதிதான் முன்னால் வந்து நிற்கும்'—என்றுதான் சொல்லிக்கொள்ள முடிகிறது.

● ● ●





86. புலமைக்கும் வறுமைக்கும் என்னதான் பொருத்தம் இருக்கிறதோ, பணத்துக்கும் புலமைக்கும் என்ன பகைமைதான் இருக்கிறதோ, தெரியவில்லை. 'பொருள்தனைப் போற்றி வாழ'த் தெரியாததனாலோ, அல்லது செல்வத்தை அடிக்கடி அவமதித்துக் கவி பாடுவதால் செல்வ தேவதையின் சினத்துக்கு ஆளாகிவிட்டதனாலோ, அல்லது எந்நேரமும் கற்பனையான மனக் கோட்டைகளிலேயே இருந்துகொண்டு காரிய முயற்சிகளில் ஈடுபடாமல் உலக விவகார ஞானத்தை உல்லங்கனம் செய்துவிடுவதனாலோ, மற்றும் என்ன காரணத்தினாலோ, 'புலவன்' என்ற பெயர் பெற்றவர்களிற் பெரும்பாலோர் வறியவர்களாவே வாழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது. வள்ளல்களும், மன்னர்களும் அமோகமாக ஆதரித்தும்கூட பல புலவர்களை வறுமைவிடவே இல்லை.

● ● ●

87. நான் புதுமைக்கென்று எதையும் மாற்றிவிட விரும்பும் புரட்சிக்காரனும் அல்ல; பழமையானது என்பதற்காக மட்டும் எதையும் மாற்றிவிட விரும்பாத வரட்சிக்காரனும் அல்ல. எந்த ஆராய்ச்சிக்கும் சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்றும் அவசியம். 'சுருதி' என்பது ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி நமக்கு முன்னால் ஆராய்ந்த அறிஞர்கள் எழுதிவைத்துப் போயிருக்கும் முடிவு. 'யுக்தி' என்பது நம்முடைய சொந்த அறிவு. 'அனுபவம்' என்பது உலகத்தில் தினப்படி வாழ்க்கையில் நாம் காணும் உண்மைகள்.

● ● ●

88. யாரிடத்தில் எந்த சக்தி இருக்கிறது என்பதைக் கண்டறிவதும் அதை ஊக்கிவிடுவதும் எல்லோரும் செய்துவிடக் கூடிய காரியம் அல்ல.

● ● ●

89. எல்லாத் தமிழ் நூல்களிலும் பொதுவாக "உயர்ந்த நோக்கம்" என்பது தெய்வ நம்பிக்கையை வலியுறுத்துவதும் ஒழுக்கத்தைக் காப்பதும் அன்பைப் புகட்டுவதும் அறங்களைச் சொல்லுவதுமாகவே இருக்கும்

● ● ●

90. அன்பையும் அதற்கான அறங்களையும் போதிக்கக்கூடிய நூல்களைத்தான் தமிழ்மக்கள் 'இலக்கியம்' என்று போற்றிப் புகழ்ந்து படித்துப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

● ● ●

91. சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஆட்சியில் சமஸ்தானக் கவிஞர்கள் இல்லாத சபைகளே இருந்ததில்லை. கவிஞன் என்று எவன் எப்போது வந்தாலும் அவனை ஆதரிக்காத அரசன் இருந்ததில்லை. இந்த மன்னர்கள் தங்கள் அந்தரங்கக் குடும்ப விஷயங்களிற் கூட தமக்கு அறிவு சொல்லக் கூடிய உரிமையைத் தந்து கவிஞர்களைப் பெருமைப் படுத்தி வந்திருக்கிறார்கள்.

● ● ●





92. பள்ளிக்கூடத்தில் பரிட்சைக்காகப் படித்துத் தொலைக்கவேண்டிய பாடங்களைத் தவிர, பரிட்சைக்குப் பிறகு அறிவுக்கான எல்லா விஷயங்களையும் ஓடுகிற ஓட்டத்தில், காதில் பட்டவரையிலும் தான் கவனிக்கலாமே தவிர, நிதானமாக ஆராய்ந்து பார்க்கவேண்டிய அவசியமும் அவசரமும் இக்காலத்தில் இளைஞர்களுக்கு இல்லை.

● ● ●

93. ஒரே மனிதன் குழந்தையாக எப்படி நடந்து கொள்ளுகிறான், மாணவனாக எப்படி நடந்துகொள்ளுகிறான், காதலனாக எப்படி நடந்துகொள்ளுகிறான், கணவனாக எப்படி நடந்து கொள்ளுகிறான். தந்தையாக எப்படி நடந்துகொள்ளுகிறான் என்றெல்லாம் தனித்தனியே அதற்கேற்ற குணங்களைக் காட்டிச் சொல்லுவதுதான் வெவ்வேறு 'துறை' அல்லது 'நிலை' என்பது.

● ● ●

94. கம்ப ராமாயணம் ஒரு சர்வகலாசாலை. அதில் காணப்படாத கலை அரிது. அநேக ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழன் பல கலைகளிலும் கைதேர்ந்தவன் என்பது சரித்திர பூர்வமான சத்தியம். தமிழ் மக்களின் அந்தக் கலைப்பண்பு கம்பன் காவியத்தில் உச்சம் பெற்றிருப்பது மறுக்க முடியாத உண்மை.

● ● ●

95. பாட்டுக் கச்சேரி கேட்கப் போகிறவர்களிற் பெரும்பாலோரும், கொஞ்சம்கூடத் தங்களுக்கு விளங்காத வார்த்தைகளையும், உணர்ச்சி ஊட்டாத ஓசைகளையும் கேட்டுக்கொண்டு நெடுநேரம் உட்கார்ந்திருப்பார்கள். பாடுகின்ற வித்துவானுடைய சலவைச் சட்டையையும், சரிகைத் துப்பட்டாவையும், அவர் வாங்கின தோடா மெடல்கள் இருந்தால் அவற்றையும், அவர் முகத்தையும் உடலையும் கோணிக்கொண்டு கைகளையும் தலையையும் நீட்டிக்கொண்டு ஆட்டிக்கொண்டிருப்பதையும், இடையிடையே பொடி போடுவதையும், கனைப்பதையும், தும்முவதையும், இருமுவதையும் பார்த்துவிட்டுத் தாங்களும் பாட்டு கேட்டதாகச் சொல்லிக்கொண்டு போவதுதான் தமிழ் நாட்டில் பாட்டுக்கச்சேரி என்பதற்குப் பதப்பொருள் என்று ஆகிவிட்டது. பாடுகின்றவர்களில் பல பேருக்கும், அவர்கள் பாடுகின்ற சாகித்யத்தின் சரியான அர்த்தமோ, அதிலுள்ள ‘பாவம்’ என்று சொல்லுகிறார்களே, அதன் பாவமோ புண்ணியமோ தெரியுமா என்பதுகூடச் சந்தேகந்தான்!

• • •

96. தமிழ்ப் பத்திரிகைகளுக்குள்ளேயே சில பத்திரிகைகள் தமிழிசை இயக்கத்தை ஆதரித்தும், சில பத்திரிகைகள் கண்டித்தும் எழுதலாயின. தமிழ் நாட்டில் பாட்டுக்கச்சேரிகளில் பாடப்படும் பாட்டுகள் தமிழில் இருக்கவேண்டுமா இல்லையா என்பதைப்பற்றி, தெலுங்கு பத்திரிகைகளும், கன்னட பத்திரிகைகளும்—





ஏன், இங்கிலீஷ் பத்திரிகைகளும்கூட—விவாதிக்க ஆரம்பித்துவிட்டன. இதுதான் சமயம் என்று அரசியல் கட்சி மனஸ்தாபங்களும் இதில் புகுந்து கலந்துகொண்டன. ஜாதிச் சண்டைகள், வடமொழி தென்மொழிச் சண்டை, ஆரிய—திராவிடச் சண்டை முதலானவைகளும், அங்கங்கே இந்தக் குழப்பத்தில் பங்குகொண்டன.

• • •

97. கர்நாடக சங்கீதம் என்ற பயிர் இந்தத் தமிழ் மண்ணிலேதான் வளர முடிந்தது. வேறு எந்த நாட்டிலும் இதற்கு வேண்டிய பூமி சத்தும், எருவும், நீரும் இருக்கவில்லை. அந்தப் பூமி சத்தும், எருவும், நீருமாக உதவினது எதுவென்றால், தமிழ் நாட்டில் சங்க காலத்திலிருந்து பாண்டிய சேர சோழ மன்னர்களாற் பாதுகாக்கப்பட்டு, தமிழ்நாட்டுக் கோயில்களில் தெய்வத்துடன் சேர்த்துக் கும்பிடப்பட்டு, நாட்டியக்காரரின் பாட்டிலும், மேளக்காரரின் வீட்டிலும் குல தெய்வமாகக் கொண்டாடப்பட்டு, தேவார, திருவாசக, திருவாய்மொழிப் பாசுரங்களில் ‘பண்பெற்று ‘என்றுமுளதென் தமிழில்’ இருந்துகொண்டே இருந்த இசைக்கலைதான். இளங்கோவடிகளின் இலக்கியத்திலும் அடியார்க்கு நல்லாரின் உரையிலும் சொல்லப்பட்ட அதே இசைக்கலைதான் காலத்துக்கேற்ற மாறுதல்களை அடைந்து, புதுப்புதுக் கலைவாணர்களுடைய மனோதர்மங்கள் கலந்து, ‘கர்நாடக’ சங்கீதமாக இப்போது காதில் விழுகின்றது.

• • •

98. 'கர்நாடகம்' என்ற சொல் தமிழ்ச் சொல் அல்ல. யாரோ அன்னியர்கள் தமிழ் நாட்டைக் கர்நாடக தேசமென்று சொன்னபோது ஏற்பட்ட அன்னியச் சொல்தான். கர்நாடக சங்கீதம் என்பது தமிழ் நாட்டுச் சங்கீதம்தான்.

• • •

99. மொழிகளை உண்டாக்குவது பண்டிதரும், வித்துவான்களும்தான். ஆனாலும் அதை வளர்த்து வாழ வைக்கிறவர்கள் பாமர மக்களே. பாமரருக்குப் பழக்கமில்லாத எந்த நடையும் விரைந்து மறைந்துவிடும்.

• • •

100. தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனர்களை ஆரியர் என்று சிலர் நினைக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனர்கள் ஆரியர்கள் என்று அவர்களே எண்ணிக் கொண்டாலும் சரி, அல்லது மற்றவர்கள் எண்ணினாலும் சரி, அது வெறும் மயக்கந்தான். தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனர்கள் ஆரியர்கள் என்றால் அந்த ஆரியர்கள் எப்போது இங்கு வந்தார்கள்? சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு உற்ற தோழியாக இருந்த தேவந்தி என்னும் பார்ப்பனப் பெண்ணும் அவளுடைய கணவன் சாத்தனும் வடக்கே இருந்து வந்த ஆரியர்களா? உக்ர பாண்டியன் ஆட்சியில் கடைச்சங்கத்தில் பல பார்ப்பன புலவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம், ஆரியர்களா? எங்கிருந்தோ பாண்டிய நாட்டுக்கு வந்து பண்டிதர்களாகி சங்கப் புலவர் ஆகிவிட்டார்களா?

• • •





101. இப்போது நாம் எதைச் செய்தாலும் அது சட்டங்களுக்குச் சரியாக இருக்கிறதா என்றுதான் பார்க்கிறோம். ஆனால் நம்முடைய முன்னோர்கள் எதைச் செய்தாலும் அது நியாயத்துக்குச் சரியா, தர்மத்துக்குத் தகுமா, அறங்களுக்கு அடுக்குமா, கண்ணுக்கு தெரியாத சாட்சியாக நிற்கும் கடவுளுக்குச் சம்மதமாகுமா என்ற முறையில்தான் அதிகமாக எண்ணினார்கள் என்பதை நம்முடைய இலக்கியங்களில் எங்கே பார்த்தாலும் எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

• • •

102. உலகத்தில் எத்தனை பாதகர்கள் புண்ணிய நாமங்களைச் சொல்லிக்கொண்டு என்னென்ன அக்கிரமங்களைச் செய்கிறார்கள்! தர்மத்துக்கும் அது நாமாவளி! அதர்மத்துக்கும் அது நாமாவளியா!

• • •

103. கவிதை சங்கீதம் அல்ல. எல்லோருக்கும் தெரிந்த வார்த்தைகளை, ஒரு கவியானவன் எல்லாருக்கும் முடியாத முறையில் அடுக்கி, படிப்பதற்கும் கேட்பதற்கும் இன்பம் தரும்படியாக இணைக்கிறான்.

• • •

104. 'வித்தை' என்றால் எல்லாராலும் செய்ய முடியாத ஒன்றை ஒரு குறிப்பிட்ட மனிதன் செய்கின்ற போது அவன் வித்தையுள்ளவன் ஆகின்றான். இந்த 'வித்தை' நமக்கு இன்பம் தருகின்றது. வாழ்க்கையில் நமக்குச் செயற்கையாக கிடைக்கின்ற எல்லா இன்பங்களும் பல வித்தைகளால்தான்.

• • •

105. அகங்காரமில்லாத அன்பிலிருந்துதான் கவிதைக்கான அலங்காரங்கள் அனைத்தும் ஆரம்பமாகின்றன.

● ● ●

106. 'நேருக்கு நேர்—வாளுக்கு வாள்' என்பதுதான் ஆண்மையும் அறிவும் ஆகும்.

● ● ●

107. இலக்கிய வேலைக்கும் அச்சமற்ற அரசியல் பிரசாரத்திற்கும் வெகுதூரம் என்பதை சுலபமாக அறியலாம்.

● ● ●

108. மனிதருடைய திட்டங்கள் மட்டும் போதாது. இறைவன் கருணையும் திட்டமும் சேரவேண்டும். அப்போதுதான் வெற்றிகிட்டும்.

● ● ●

109. ஒரு நாடு விடுதலை பெறுவது சிலரால்தான். குப்பை கூளங்கலான பெருங் கூட்டத்தால் அல்ல.

● ● ●

110. வெறும் பொய்களையோ அல்லது திரித்துக் கூறுவதையோ செய்து புரளி பேசி இன்புறுவது சகஜம் தான். இப்போது பொய்கள்தாம் முக்கிய சரக்காக விலை போகின்றது. உடனடியாக ஒரு நன்மை அடைய வேண்டுமானால் அதற்கு உண்மையைக்காட்டிலும் பொய் தான் உதவுகின்றது.

● ● ●





111. நான் யாரையானாலும் எதற்காகவானாலும் மன்னிக்கத் தயார். ஆனால், கம்ப ராமாயணத்தை எரிக்கவேண்டும் என்றும், பிராமண சமூகத்தை அழிக்க வேண்டும் என்றும், வடமொழி சம்பந்தத்தை ஒழிக்க வேண்டும் என்றும் மூர்க்கத்தனங்களை மேற்கொண்டிருக்கிற எவரோடும் ஒத்துழைக்கத் தயாரில்லை.

● ● ●

112. நல்ல அரசியல் அமைப்புக்களையும் ஆட்சி முறைகளையும் சிந்தனை செய்து திட்டப்படுத்துவது எளிதான காரியம் அன்று.

● ● ●

113. மனித வர்க்கம் கற்றுக்கொண்டிருக்கி அநேக வித்தைகளுக்குள் இந்த அரசியல் கலைதான் நம்முடைய கட்டுக்குள் அகப்படாததாகத் தோன்றுகின்றது.

● ● ●

114. மானிட ஜாதி தோன்றிய நாள் தொடங்கி மனிதனுக்கு மனிதன் மாச்சரியங்கள் இல்லாமல், கூடுமானவரையிலும் எல்லா விதத்திலும் விரும்பத்தக்கதான முறையில், குற்றங்கள் மிகவும் குறைவாக உள்ள ஒரு அரசாங்க முறை இதுவரையிலும் எந்த நாட்டிலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இப்போதுள்ள எல்லா அரசாட்சி முறைகளும் குறைபாடுள்ளனவாகவே இருக்கின்றன. ஒருவிதத்தில் மிகவும் நல்லதாக இருக்கிற ஒரு அரசியல் முறை வேறு பல விதங்களில் தீமை

விளைக்கக்கூடியதாக இருக்கிறது. பல விதங்களில் நன்மை பயப்பதாக இருக்கும் ஒரு அரசியல் முறை வேறு ஒரே வழியில் அந்த நன்மைகள் அனைத்தையும் அழித்து விடக்கூடிய தீமையுள்ளதாக இருக்கிறது.

● ● ●

*115.* அச்சமும் அடிமைத்தனமும், குற்றவாளிகளும், விலங்கிடும் வழக்கமும் இல்லாமல் அறங்களை மதித்தே அவரவர் வாழ்க்கையை அவரவர் சுதந்திரமாக நடத்தினார்கள் என்று சொல்லக்கூடிய சமுதாயமும் அரசாட்சியும் அமைந்த நாடு, கவிகளின் கற்பனைகளில்தான் காண்கின்றோமேயல்லாமல் நடைமுறையில் எந்த நாட்டிலும் இருந்திருப்பதாகச் சரித்திரத்தில் காணோம்.

● ● ●

*116.* எல்லா இன்பங்களையும் நாம் நம்முடைய பஞ்ச இந்திரியங்களால் அனுபவிக்கிறோம். 'மெய்', 'வாய்', 'கண்', 'மூக்கு', 'செவி' என்ற ஐந்தும்தான் இந்திரியங்கள்.

● ● ●

*117.* மெய்என்றால் தேகம். தேகத்தால் நாம் உணரும் இன்பம் ஸ்பரிச இன்பம். ஸ்பரிசம் என்றால் நம்முடைய தேகத்தின்மேல் இன்னொரு பொருள் படுகின்றதை அறிகிற உணர்ச்சி. தினந்தினம் எத்தனையோ பொருள்கள் நம் உடம்பின்மேல் படுகின்றன. எல்லாவற்றிலும் நமக்கு இன்பம் உண்டாவதில்லை.

● ● ●





*118.* வாய் என்று இந்திரியங்களோடு சேர்த்துச் சொன்னால், 'நாக்கு ருசி' என்றுதான் அர்த்தம். பல இயற்கைப் பொருள்கள் நமக்குப் பலவிதமான ருசிகளைத் தருகின்றன. சில ருசிகள் இன்பமாக இருக்கின்றன. ஒரு நல்ல சமையற்காரன் பலவிதமான ருசிகள் உள்ள பல இயற்கைப் பொருள்களை ஒரு சாமர்த்தியமான செயற்கை முறையில் பாகப்படுத்துகிறபோது இந்த இயற்கைப் பொருள்கள் எதுவும் தனித்தனியாகத் தர முடியாத ஒரு புது ருசியை அந்த சமையல் தருகின்றது.

● ● ●

*119.* கண் என்றால் பார்வை. உலகத்தில் எத்தனையோ பொருள்களைப் பார்க்கிறோம். இயற்கையில் நமக்கு ரம்மியம் உண்டாகக்கூடிய காட்சிகள் பல இருக்கின்றன. அவை போக, நாம் பார்த்த உடனே ஒரு தனி இன்பத்தைத் தருகின்ற செயற்கை - வித்தைகள் பல இருக்கின்றன.

● ● ●

*120.* மூக்கு என்றால் மோப்பம். அநேக வாசனைகளை முகர்கின்றோம். இயற்கையில் எத்தனையோ வாசனைகள் இருக்கின்றன. நல்ல வாசனை இன்பம் தருகின்றது. துர்நாற்றம் துன்பம் தருகின்றது. புதுப் புது மோப்ப இன்பங்களை உண்டாக்க வேண்டுமென்றே, ஒரு அத்தர் வியாபாரி, பலவித இயற்கைச் சரக்குகளை ஒரு தனி அறிவுடன் செயற்கையாக கலவை செய்கிறான். அதனால், இயற்கையில் இல்லாத பலப் புதுப்புது மணங்களை முகர்ந்து மகிழ்கின்றோம்.

● ● ●

121. செவி என்றால் ஓசைகளைக் கேட்கும் உணர்ச்சி. நாம் அநேக சப்தங்களைக் கேட்கிறோம். சில ஓசைகள் திடுக்கிடச்செய்கின்றன. சில பயப்படச் செய்கின்றன. சில துக்கப்படச் செய்கின்றன. சில சிரிக்கச்செய்கின்றன. எல்லாரும், இந்த எல்லா ஓசைகளையும் பல சமயங்களில் தங்களை அறியாமலே உண்டாக்கலாம்.

● ● ●

122. பெண்களை இகழ்ந்து முற்றிலும் பேதைகள் என்று பேசி புண்கொள்ளுமாறு எழுதிவைத்துப் புரை கொள்ளச்செய்து, வாழ்வின் கண்களில் ஒன்றைக் குத்திக் கரித்திடச் செய்தார் முன்னோர்.

● ● ●

123. மறுமணம் மாதர்க்கில்லை, மதலையை விதவை யாக்கி நறுமணப் பூவுமின்றி நல்லதோர் துணியுமின்றி உறுமணல் தேரையைப்போல் ஒளித்திருந்து ஒடுங்கச் செய்யும் சிறுமனப்பான்மையே நம் தேசத்தின் நாசம்.

● ● ●

124. நாட்டியம் ஆடச்செய்தும், நாடகம் நடிக்கச் செய்தும், பாட்டையும் பாடச்செய்து, பரத்தையர் குலமும் பண்ணி ஆட்டிய கதைகள் எல்லாம், 'ஆடவர்க் கான இன்ப வேட்டையே பெண்கள்' என்ற விருப்பையே தான் விளக்குகின்றது.

● ● ●





125. ஊரெல்லாம் செழிக்கவேண்டும், உயிரெல் லாம் களிக்கவேண்டும், நிகரில்லாத புதுமைமிக்க சமுதாயம் நிறுவவேண்டும். உலகமெல்லாம் நமது நாட்டின் பெரும்புகழ் பரப்பி, மக்களுடைய போர் எல்லாம் ஒடுங்க வேண்டும்.

● ● ●

126. வாய்மையும் கருணையும் சேர்ந்த வாழ்க்கையை வகுத்துக் கூறி, தூய்மையைப் புகட்டல் ஒன்றே இலக்கியத் துறையாய்க்கொண்டு, தாய்மொழித் தமிழைப் போற்றுவது தனியறம் என்றே நல்ல அறிஞர்கள் அடிக்கடி கூடிப் பேசவேண்டும்.

● ● ●

127. புதுப்புது எண்ணம் வேண்டும். வாழ்க்கையிற் புதுமை வேண்டும். மதிப்புடன் நம்மைக் கண்டு மற்ற நாட்டவர்களெல்லாம் துதிப்புடன் தொடர, எல்லாத் துறையிலும் புதுமை தோன்ற 'விதிப்பயன்' என்ற பேச்சை விட்டிடவேண்டும்.

● ● ●

128. பிறந்தவர் சாவது உண்மை; பெற்ற பொன் நாட்டிற்காக அறந்தரும் சிந்தை கொண்டு, அன்புமிக்க பணிகள் ஆற்றி இறந்தவரன்றோ என்றும் இருப்பவர் ஆவார்.

● ● ●

129. தன் குஞ்சு ஒன்றே பொன் குஞ்சு என்று கன்னங்கறுத்த காக்கையும் கருதும் என்னும் பழமொழிக் கிணங்க அவரவர் மொழியே அவரவர்க்குயர்ந்தது.

● ● ●

130. தமிழைப் போற்றுதல் தமிழரின் கடமை. தமிழின் வளர்ச்சியை மனதில் தரித்து, அன்னியர் அறிவையும் தமிழில் ஆக்கி, அவசியமானுல் அருவருப் பின்றிப் பிறமொழிப் பதங்களைத் தமிழில் சேர்த்து, தொழில் முறை அறிவுகள் தமிழில் தொடுத்து, ஏனைய நாட்டின் எல்லா அறிவும் தமிழில் உண்டு எனப் பெருமைப்படும்படி செய்துவைப்பதே தமிழ் மொழிச் சேவை.

• • •

131. அசதியைப் போக்கி, அறிவைக் கிளப்பி, இன்பதுன்ப உணர்ச்சிகள் எழுப்பி, நன்மை தீமையை நன்ருய் விளக்கி, இல்லாத ஒன்றை இருப்பதுபோல் மனக்கண்முன் மலரச்செய்து, இருக்கிற ஒன்றையும் இல்லாததுபோல் மனதைவிட்டு மறையச்செய்து, வாழ்க்கைக்கு உதவும் நல்ல வழிகளில் ஊக்கமும் உறுதியும் கொள்ளச்செய்வது கவிதை.

• • •

132. கவிதை என்பது கற்பனை உள்ளது. கூட்டியும் பேசும் குறைத்தும் கூறும். பொய்மையும் வாய்மையே போலப் பொலிவுற அறங்களைப் புகட்டுவதே அதனுடைய நோக்கம்.

• • •

133. விஞ்ஞானங்களை விருத்தி செய்துள்ள நாட்டவர் கண்ட நன்மைகள் என்ன? எளிதில் மனிதரை எப்படிக் கொல்லலாம்? எவருடன் சண்டை எப்படிச் செய்யலாம் என்பதைத் தவிர என்ன சாதித்தார்கள்?

• • •





134. தன்னுடை ஒழுக்கம் தவறிய மன்னவன் தமிழர் பரம்பரை தன்னிலே இல்லை.

• • •

135. சண்டை செய்வதும் சாவதும் கொல்வதும் பண்டைத் தமிழன் பார்த்துச் சலித்தது.

• • •

136, புதுமை மிகுந்தன போலவே தோன்றும் ஐரோப்பியரின் அதிசயம் மிகுந்த விஞ்ஞானமெல்லாம் வாண வேடிக்கை.

• • •

137. மெய்ஞ்ஞான மென்பது மெய்யோ பொய்யோ
விஞ்ஞானத்தின் தீமைகள் வெளிப்படை.

• • •

138. ஆயிரம் பற்பல ஆண்டுகள் முன்னுல்
இந்திய நாட்டில் இருந்தநம் முன்னோர்
படித்துத் தேறிய ஆரம்பப் பாடமே
இன்று மேல்நாட்டவர் இருக்கிற நிலைமை.

• • •

139. புதுப்புது வழிகளைப் புகுத்தலே அறிவு.

• • •

140. ஆடலும் பாடலும் அலுப்புத் தீரவே
நாடகம் பார்ப்பது நலிவுகள் மறக்க
சித்திர இன்பமும் சிரமம் தீர்க்கவே
சிற்பச் சிலைகளும் சிந்தனையூட்டவே.

• • •

141. களைப்பு மாறினால் கவலையும் குறையும்.

● ● ●

142. பசிப்பிணி போனால் பலதுயர் போகும்.

● ● ●

143. பசிக்களை தீர்ந்ததும் பாட்டிலே மனதை
கொஞ்சம் திருப்பினால் சஞ்சலம் குறையும்
ஊக்கமும் பெருகி உத்ஸாகமும் வரும்.

● ● ●

144. விபசார ஆசை தீமை விளைக்கும்.

● ● ●

145. அழகிய எதிலும் ஆசை கொள்வது
உயிர்களுக்கெல்லாம் பிறப்பின் உரிமை.

● ● ●

146. இன்பப் பொருளில் இச்சை பிறப்பது
தடுக்க ஒண்ணாத தத்துவம் ஆகும்.

● ● ●

147. கண்ணுக் கின்பம் காண்பதே போதும்
காதுக் கின்பம் கேட்டால் கழியும்
மூக்கிற் கின்பம் முகர்ந்தால் முடிவுறும்
நாக்கிற் கின்பம் நற்சுவை நல்கும்.

● ● ●





148. உடலுக் கின்பம் காமம் ஒன்றே
அறிவுக் கின்பம் அதன்மேல் உண்டு
அதற்கும் மேலாம் ஆன்ம இன்பம்.

● ● ●

149. காமம் என்பது அடிக்கடி கலையும்
ஒன்றை விட்டு ஒன்றைத் தாவும்
புதுப்புது இடங்களிற் புகுந்து புழுங்கும்
ஆதலால் அதனை அஞ்சுவர் யாரும்.

● ● ●

150. காதலுக் குள்ளே காமம் இருப்பினும்
காமம் என்பதில் காதலே இல்லை.

● ● ●

151. காமம் என்பது தேகம் கலத்தல்
அறிவு, உணர்ச்சி, ஆன்மாவி னோடும்
கலந்து போவதே காதல் எனப்படும்.

● ● ●

152. காதலின் குணத்தைச் சொல்வது கடினம்
அனுபவம் ஒன்றே அறியக் கூடும்.

● ● ●

153. கற்பெனப் படுவது பெண்களின் காவல்
காப்பதோ விடுவதோ அவர்களின் காரியம்.

● ● ●

154. கற்பிற்சிறந்த பெண்களின் கதைகளே
சமுதாயத்தை வளர்க்கும் சாரம்.

● ● ●

155. காதலை இழந்தும் கற்பைக் காத்த
பெண்களின் பெருமை பேசவும் பெரிதே.

● ● ●

156. ஆண்களுக் கேனும் பெண்களுக் காயினும்
கற்பைக் காக்கிற கடமை பொதுவே.

● ● ●

157. சொல்லிற் சிறந்ததை எவர் சொன்னாலும்
போற்றி ஏற்றிப் புகழ்ந்து மகிழவேண்டும்.

● ● ●

158. விரோதக் குரோத வெம்மை வளரும்
வேறு தீமை விளையினும் விளையும்.

● ● ●

159. நம்பிய ஒருவனை நழுவ விடுவதை
மானம் உடையவர் மதித்திடமாட்டார்.

● ● ●

160. சேற்றைக் குழப்பிய தன்சிசு கையினால்
சோற்றைக் குழைப்பினும்
சொர்க்க மென்றுண்ணும்
பெற்ற மனத்தின் தெய்விகப் பெருமை.

● ● ●





161. சொத்து சுகங்களைத் தொடர்ந்திட வென்று
தத்துக்காயினும் தமக் கொரு மகவை
வாங்கி வளர்த்து வருத்தம் குறைந்து
ஏங்கிய மனதிற்கு இன்பமாய் எண்ணுவார்.

● ● ●

162. தான்பெற்ற தென்னினும் தனதல்ல வாயினும்
எத்தனை குழந்தைகள் பெற்றவர் என்னினும்
‘குழந்தை’ என்றாலே உள்ளம் குளிர்வார்.

● ● ●

163. குழந்தையைக் கண்டால் கோபம் குறையும்.

● ● ●

164. கொண்ட கணவன் குணமிலர் என்றால்
கண்டவர் எல்லாம் காதலர் தானா?

● ● ●

165. கட்டின புருஷன் காதலிக்காவிடில்
எட்டினபேரெலாம் இச்சை கொள்வதா?

● ● ●

166. இல்லறம் முற்றிலும் அன்பின் இயக்கமே.

● ● ●

167. அன்பைப் போன்ற அரும்பெரும் செல்வம்
மனிதன் பெறுவது மற்றெதும் இல்லை
அறிந்தவர்க் கெல்லாம் அன்பே தெய்வம்.

● ● ●

168. அன்பின் பெருமைதான் காதல் ஆவதும்
அன்பின் விகாரமே காமமாய் அலர்வது
அன்பின் விரிவுதான் அருளாய் மலர்வது.

● ● ●

169. துறவறம் அருள்செயத் துணைதரும் எனினும்
இல்லற வாழ்விலும் அருளோடிருப்பதே [ஆன்றோர்
வகுத்த அற நெறிப் பொருளாகும்.

● ● ●

170. பிறர் குறை பேசிப் பிழைக்க எண்ணாது
சிறுமை எதையும் சிரித்தள்ளும், இனிய [சொற்களே
இயல்பாய்ப் பேசும், பொன்னே வரினும் [புறஞ்சொல்லாது,
கொள்கை விடாமல் கொடுமை சகிக்கும், [தன்னலச்
செலவில் பிறநலம் தாங்கும், நீதி இல்லாத [வழிகளை
நீக்கிய வெற்றி விருப்பமே வீரம் என்பது.

● ● ●





171. வியப்புற இன்பம் விருப்புற விளைக்கும்
காரியத் திறமையே 'கலை' எனப்படுவது.

● ● ●

172. இன்பம் தருகிற எல்லாச் செய்கையும்
கலையின் இனமாய்க் கருதத் தக்கதே.

● ● ●

173. இன்பம் என்பதில் இரண்டு விதங்கள்,
இயற்கை இன்பமும் செயற்கை இன்பமும்.
இயற்கை இன்பம் ஈடற்றதெனினும்
செயற்கை இன்பமே சிறப்பென எண்ணி
மகிழ்வது மாநில மக்களின் இயல்பு

● ● ●

174. கலைகளின் இன்பம் புலன்களைக் கவர்ந்து
ஒழுக்கக் கேட்டையும் உண்டாக்கும் அதனால்
தமிழன் கலையெனத் தந்தனயாவும்
அறங்களைப் போற்றும் அறிவையே நாடும்.

● ● ●

175. தருமம் பேசாத் தமிழ்நூல் கலையை
இலக்கிய மாகவே எண்ணான் தமிழன்.

● ● ●

176. கலைகளை வளர்த்த காரணம் எல்லாம்
செயற்கை இன்பமும் இயற்கையில் சேர்ந்து
அறிவைத்துலக்கி அன்பைப் பெருக்கி
சச்சர வில்லா சமுதாய வாழ்வை உண்டாக்கி
வைத்தல் ஒன்றே நோக்கம்.

• • •

177. மனிதருக் கெல்லாம் மானமே பெரிது

• • •

178. கல்வியும் பயனும் கலைகளின் நோக்கமும்
ஒழுக்கம் என்கிற ஒன்றேயாகும்

• • •

179. மறுமண உரிமை மாதருக்கு உண்டு

• • •

180. பாலிய விதவைகள் பரிதாபங்களை
நீக்கிட வேண்டிய நீதியைக் காட்ட
மாதர் விரும்பினால் மறுமண உரிமை
அவர்களுக்கு அளிப்பதே அறிவாகும்

• • •

181. பெண்மையின் பெருமை பிழைபட நேர்ந்தால்
நாட்டிற்கே அது கேட்டைத் தரும்

• • •





182. பெண்மை என்பது பிழைபட்ட நாட்டில்
இன்பக் குடித்தனம் இருப்பது கடினம்

• • •

183. அச்சம் விட்டது சுதந்திரம்
அன்பு விடாதது சுதந்திரம்

• • •

184. முத்தமிழ்நாடு எந்தன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக்கெனப் பாடு

• • •

185. பாழும் பணத்தைத் தேடி. படும்பாடு
[கணக்கில்லை
பகவானை எண்ணமட்டும் அவகாசம்
[உனக்கில்லை

• • •

186. சொல்லுவது எல்லார்க்கும் சுலபமாகும்
சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்

• • •

187. எல்லையின்றி நீதிகளை எழுதுவார்கள்
எழுதியது பிறருக்கே தமக்கென்றெண்ணார்

• • •

188. மனிதவாழ்வை மிருகமாக்கும் மமதையாவும்
மாற்றுவோம் புனிதமிக்க புதிய வாழ்வு
புவியில் மீளப் போற்றுவோம்

• • •

189. கருமமது செய்தல் வேண்டும்
கலங்காது உழைத்தல் வேண்டும்

● ● ●

190. சாதிகுலம் பிறப்புகளாற் பெருமை யில்லை

● ● ●

191. பாழும் கள்ளால் பட்டதை நினைத்தால்
பதைக்குது நெஞ்சம் கொதிக்குதடா

● ● ●

192. வம்பளந்து வீண் கதைகள் பேசிப் பேசி
வாழ்வின் எல்லாத் துறைகளிலும்
[வறியரானோம்

● ● ●

193. கலையென்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்
களிப்பூட்டி அறிவினைப்போய் கவ்வ வேண்டும்

● ● ●

194. ஓடி ஓடி நாட்டில் எங்கும்
உண்மை பரப்புவாய்

● ● ●

195. தலையாய அறிவுக்குத் தமிழ் என்று பேர்

● ● ●

196. வீரம் என்பது கொலையல்ல
வெற்றியும் அதனால் நிலையல்ல

● ● ●





197. உண்மையைக் கடைப்பிடித்து
உயர்ந்தார்களை உலக மோசம் என்ன
[செய்யும்?

● ● ●

198. கள்ளைக் குடிப்பவன் சண்டாளன்
காமத்தலைபவன் சண்டாளன்
கொள்ளை அடிப்பவன் சண்டாளன்
கூடிக் கெடுப்பவன் சண்டாளன்

● ● ●

199. கூலியை மறைத்தவன் சண்டாளன்
கோள்சொல்லிப் பிழைப்பவன் சண்டாளன்

● ● ●

200. வட்டி பெருக்கி ஏழைகளின்
வாழ்வு கெடுத்தவன் சண்டாளன்

● ● ●

201. கொடுமை செய்யும் வழக்க மெல்லாம்
கொளுத்த வேண்டும்.
ஒருவருக்கும் கொடுமை இன்றிக்
கொளுத்த வேண்டும்

● ● ●

202. ஏழைகளை வருத்தும் எண்ணம் குறையவில்லை
ஏமாற்றி வாழ்ந்திடும் இச்சை மறையவில்லை

● ● ●

203. ஆண்மை மறந்தவர்க்கு ஆளும்
திறமை உண்டோ ?

● ● ●

204. ஏழையின் துயரம் என் துயர்

● ● ●

205. காட்டிலும் மேட்டிலும் களைப்போடு
கஷ்டப்படுவோர் உழைப்பின்றி
வீட்டினில் சாதம் வெந்திடுமோ
வேறெதும் உணவைத் தந்திடுமோ ?

● ● ●

206. காந்தி காந்தி காந்தியென்று காதடைக்கக்
[கூவினோம்
காந்தி சொல்லும் சாந்திமட்டும் காதில்
[ஏறவில்லையே !

● ● ●

207. பூசையோடு கோவிலுக்குள் பூட்டிவைக்கும்
[சாமிபோல்
ஓசையோடு காந்திபொம்மை ஊர்வலங்கள்
[செய்கிறோம்

● ● ●





208. மாணவ இளைஞரின் சிறந்த தனம்
மாசுகள் படியா குழந்தை மனம்

● ● ●

209. கூடு இழந்த போதினும் பறவை குந்தி
[நொந்திடாது

● ● ●

210. பட்டணக் கரைகளின் செழிப்பெல்லாம்
பட்டிக்காட்டவர் உழைப்பன்றோ ?

● ● ●

211. மதிப்பிற்குரியது பணமல்ல,
மக்களின் நலமும் குணமும்தான்

● ● ●

212. உழவையும் நெசவையும் அவமதித்தோம்
உண்ணவும் உடுக்கவும் தவிதவித்தோம்

● ● ●

213. காந்தி விதைத்த மரம் காய்க்காமல் போகாது
சாந்தி அடைந்திடுவோம்
சங்கடத்தை வென்றிடுவோம்

● ● ●

214. தமிழர் நாட்டை தமிழர் ஆண்டு
தமிழ்க் குணத்தைக் காப்பதே
அமுதம் ஊறும் அன்பின் வாழ்க்கை
அகில மெங்கும் பூப்பதாம்

● ● ●

215. தீமையைத் தீமையில் தீர்க்க நினைப்பது
தீயினைத் தீயில் அவிப்பது போல்

● ● ●

216. தேக உழைப்புகள் செய்யாமல்
தேடிடும் செல்வம் பொய்யாகும்

● ● ●

217. எம்மதம் ஆயினும் சம்மதம் என்பதை
ஏந்தி நடப்பது தமிழ்நாடு

● ● ●

218. எண்ணிறந்த ஞானவான்கள்
இந்தப்பூமி கண்டது

● ● ●

219. மன்னில் எங்கள் காந்தி போல
மற்றொருத்தர் உண்டோ ?

● ● ●





220. தேடுகின்ற உண்மையாவும்
ஓடிவந்து நிற்குமே
தெய்வ வாக்கு வள்ளுவன்
திருக்குறளைக் கற்கவே !

● ● ●

221. தெய்வம் என்று உலகம் நித்தம்
தேடுகின்ற ஒன்றுதான்
வையகத்தில் அன்பு என்ற
வார்த்தையாக நின்றதே !

● ● ●

222. உத்தமன் காந்தியை மறந்து விடின்
உண்மைச் சுதந்திரம் மறைந்துவிடும்

● ● ●

223. பாட்டாளி மக்களின் பசி தீர வேண்டும்

● ● ●

224. வேறொரு மதமென அண்டையில் வசிப்பவர்
வீட்டினைக் கொளுத்துதல் வீரமதோ !

● ● ●

225. வேற்றுமை பலவிலும் ஒற்றுமை கண்டிடும்
வித்தையிற் சிறந்தது தமிழ்நாடு

● ● ●

226\. ஆயுத பலங்களை நம்பாதே
ஐரோப்பியர் போல் வெம்பாதே

● ● ●

227\. வேகிற நெருப்பால் சமைத்திடலாம்
வெறுந்தணல் உணவாய் அமைந்திடுமோ

● ● ●

228\. அஞ்ஞானத்தின் வடிவன்றோ
அணுகுண்டாகிய வெடிகுண்டு

● ● ●

229\. நிலைதரும் வள்ளுவன் மொழி கற்போர்
நிச்சயம் காந்தியின் வழி நிற்பார்

● ● ●

230\. ஹிம்சை புரிந்தவர்கள் அந்த
ஹிம்சையினால் அழிவார்கள்

● ● ●

231\. நமது பாரதியின் பாட்டே
தமிழ் நலத்தைக் காக்கும் ஒரு கோட்டை

● ● ●

232\. கவிஞன் வாக்குறுதி பலிக்கும்.

● ● ●

233\. வாழ்க பாரதியின் அருமை
அதில் வளர்க தாய்மொழியின் பெருமை

● ● ●





234\. காந்தியின் வாழ்வே கடவுளைக் காட்டும்
கல்விகள் தேடிடும் கருணையை ஊட்டும்

● ● ●

235\. அன்புடைய பேரை எல்லாம்
ஆபத்தில் அறியலாம்

● ● ●

236\. கம்பனை மறந்தால் தமிழ் ஏது?
கவிதை என்பது கமழாது

● ● ●

237\. இன்னொரு கம்பனும் வருவானோ
இப்படியும் கவி தருவானோ?

● ● ●

238\. அஞ்சாத நிலையே ஆண்மை
அஞ்சினோர்க் கருளல் ஆண்மை

● ● ●

239\. உள்ளதை உரைத்தல் ஆண்மை
ஒளிப்பதை ஒழித்தல் ஆண்மை

● ● ●

240\. சிறுமை எதையும் சீறித்தள்ளும்

● ● ●

241\. வாக்கழிந்து விட்டால் பின்னர்
வாழ்வு தாழ்வது ஆகும்

● ● ●

242. வார்த்தை மாறிவிட்டால்
மனிதன் வாசமற்ற மலரே!

● ● ●

243. சின்ன ஏழைக்கேனும் சொல்லே
ஜீவ நாடியாகும்

● ● ●

244. குண்டு போட யுத்தமா?
கொல்லக் கூட வித்தையா?

● ● ●

245. மண்டை வந்த நாளிலே
மரணம் உண்டு தோளிலே!

● ● ●

246. படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க

● ● ●

247. வாழி இந்த உலகமுற்றும்
வம்பிலாது வாழ்கவே

● ● ●

248. வாழ்க எங்கள் தமிழகம்
வாழ்க எங்கள் மனையறம்
வாழ்க மேழிச் செல்வம்
வளர்க நாட்டுக் கைத்தொழில்
வாழ்க எங்கள் வாணிபம்
வாழ்க எங்கள் அரசியல்
அன்புகொண்டு அனைவரும்
அச்சமின்றி வாழ்கவே!

K402
0120

# ஹாஸ்யச் சுரங்கம்

அகில இந்திய ரேடியோ நிலையம். திருச்சி நிர்வாகி

## ரா. பார்த்தசாரதி பி. ஏ. பி. எல். ("பரதன்")

(ராஜாஜி அவர்களின் முன்னுரையுடன் கூடியது)

★



ராவண மீசை ஸலூன்காரர்



ரிகார்ட்டிலிருந்து தலை தப்பிய ஹெட் கிளார்க்

இன்னும் அக்ஷதை அண்ணாஜி, பிறைக் குடுமி வைத்துச் சிங்காரிக்கும் ஸெலூன் சிங்காரம், லேடீஸ் கிளப் தலைவி மிஸஸ் விசாலம், மூக்கில் கரியும் கையில் குழவியுமாக வரும் சஹதர்மிணி முதலான பாத்திரங்களின் வர்ணனைகளைப்பற்றி 'பரதன்' சித்தரிப்பது குலுங்க, குலுங்கச் சிரிக்கச் செய்யும்.

இந்தப் புத்தகத்தைப்பற்றி கவர்னர்-ஜெனரல் ராஜாஜி முன்னுரையில் "...ரா. பார்த்தசாரதி எனக்கு சிறுவயது முதல் தெரிந்தவர்...பிடிவாதக்காரர்கள் எழுத்து எப்போதும் நன்றாகவே இருக்கும்..." என்று கூறுகிறார்.

விலை ரூ. 2 8 0

# தமிழ்ப்பண்ணை

தியாகராயநகர் — சென்னை.